# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது மற்றும் சிறப்பு கலைமாணித் தேர்வு

## 2012/2013 (March/2015)

LIBRARY
01 JUN 2015

## ECO/S 3201 Applied Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. "ஒரு நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயலாற்றத்தினையும் விளக்குவதற்கு பொருளாதார வளர்ச்சியானது ஒரு முக்கியமான குறிகாட்டியாக கருதப்படுகின்றது"

(அ) சுதந்திரமடைந்த காலம் தொட்டு இன்று வரை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களையும், தளம்பல் நிலைமைகளையும் அதற்கான காரணங்களையும் ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான துறைசார் பங்களிப்பு பற்றி விபரிக்குக.

(12 புள்ளிகள்)

02. (அ) விவசாயத் துறையின் முக்கியத்துவத்தினையும், இலங்கைப் பொருளாதாரத்தில் இத்துறையின் வகிபங்கினையும் (Role) ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் எந்தளவுக்கு வெற்றியடைந்துள்ளன என்பதனை விமர்சனரீதியாக ஆராய்க.

(13 புள்ளிகள்)

03. (அ) இலங்கையின் வர்த்தக கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் கைத்தொழில் துறையில் ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பிடுக.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கைத்தொழில் மயமாக்கம் சரியான முறையில் இடம்பெறுகின்றதா? என்பதனை விமர்சன ரீதியாக விளக்கி அதனை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை முன்வைக்குக.

(13 புள்ளிகள்)

04. "இலங்கை சுதந்திரமடைந்த வேளையில் இலங்கைப் பொருளாதாரம் தவிர்க்க முடியாதவாறு பெருந்தோட்ட விவசாயத்தோடு பிணைக்கப்பட்டிருந்தது.

(அ) பெருந்தோட்டத்துறை தற்போது இலங்கைப் பொருளாதாரத்திற்கு வழங்கும் பிரதான பங்களிப்புக்களையும், அவை தனியார்மயப்படுத்தப்பட்டமையின் இத்துறையில் ஏற்பட்ட சாதகமான தாக்கங்களையும் ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) பெருந்தோட்டத்துறை தற்போது எதிர்நோக்கும் சவால்களை ஆராய்க.

(13 புள்ளிகள்)

05. "உலகமயமாக்கமானது புதிய உலக ஒழுங்குமுறையின் ஒரு சக்திவாய்ந்த நடைமுறைசார் பண்புக்கூறாகும்" உலகமயமாக்கம் மூன்றாம் மண்டல நாடுகளில் ஏற்படுத்தும் பொருளாதார தாக்கங்களை விமர்சனரீதியாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) பொருளாதார அபிவிருத்தியில் சனத்தொகையின் தாக்கம்

(ஆ) இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பில் சேவைத்துறையின் போக்கு

(இ) பொருளாதார தாராளமயமாக்கமும் உள்நாட்டு விவசாயமும்

(ஈ) இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

(உ) இலங்கையின் நலன்புரித்திட்டங்களிற்கான செலவு

(5x5 = 25 புள்ளிகள்)